## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 3-4 - புகழுநல்லொருவன்
### (எம்பெருமான் எப்பொருளுமாய் நிற்பதைப் பேசி வாசிகமான அடிமை செய்தல்)

2930 * புகழும் நல்லொருவன் என்கோ? * பொருவில்சீர்ப் பூமி என்கோ? *
திகழும் தண்பரவை என்கோ? * தீயென்கோ? வாயு என்கோ? **
நிகழும் ஆகாசம் என்கோ? * நீள்சுடர் இரண்டும் என்கோ? *
இகழ்வில் இவ்வனைத்தும் என்கோ? * கண்ணனைக் கூவுமாறே 1

2931 கூவுமாறு அறிய மாட்டேன் * குன்றங்கள் அனைத்தும் என்கோ? *
மேவுசீர் மாரி என்கோ? * விளங்கு தாரகைகள் என்கோ? **
நாவியல் கலைகள் என்கோ? * ஞான நல்லாவி என்கோ? *
பாவுசீர்க் கண்ணன் எம்மான் * பங்கயக் கண்ணனையே 2

2932 பங்கயக் கண்ணன் என்கோ? * பவளச் செவ்வாயன் என்கோ? *
அங்கதிர் அடியன் என்கோ? * அஞ்சன வண்ணன் என்கோ? **
செங்கதிர் முடியன் என்கோ? * திருமறு மார்வன் என்கோ? *
சங்கு சக்கரத்தன் என்கோ? * சாதி மாணிக்கத்தையே 3

2933 சாதி மாணிக்கம் என்கோ? * சவிகோள் பொன் முத்தம் என்கோ? *
சாதி நல் வயிரம் என்கோ? * தவிவில் சீர் விளக்கம் என்கோ? **
ஆதியஞ்சோதி என்கோ? * ஆதியம் புருடன் என்கோ? *
ஆதுமில் காலத்து எந்தை * அச்சுதன் அமலனையே 4

2934 அச்சுதன் அமலன் என்கோ? * அடியவர் வினை கெடுக்கும் *
நச்சுமா மருந்தம் என்கோ? * நலங்கடல் அமுதம் என்கோ? **
அச்சுவைக் கட்டி என்கோ? * அறுசுவை அடிசில் என்கோ? *
நெய்ச்சுவைத்தேறல் என்கோ? * கனி என்கோ? பால் என்கேனோ? 5

2935 பால் என்கோ? * நாங்கு வேதப் பயன் என்கோ? * சமய நீதி
நூல் என்கோ? * நுடங்கு கேள்வி இசை என்கோ? ** இவற்றுள் நல்ல
மேல் என்கோ? * வினையின் மிக்க பயன் என்கோ? * கண்ணன் என்கோ?
மால் என்கோ? மாயன் என்கோ? * வானவர் ஆதியையே 6

2936 வானவர் ஆதி என்கோ? * வானவர் தெய்வம் என்கோ? *
வானவர் போகம் என்கோ? * வானவர் முற்றும் என்கோ? **
ஊனமில் செல்வம் என்கோ? * ஊனமில் சுவர்க்கம் என்கோ? *
ஊனமில் மோக்கம் என்கோ? * ஒளிமணி வண்ணனையே 7

2937 ஒளிமணி வண்ணன் என்கோ? * ஒருவன் என்றேத்த நின்ற *
நளிர்மதிச் சடையன் என்கோ? * நான்முகக் கடவுள் என்கோ? **
அளிமகிழ்ந்து உலகம் எல்லாம் * படைத்தவை ஏத்த நின்ற *

களிமலர்த் துளவன் எம்மான் * கண்ணனை மாயனையே 8

2938 கண்ணனை மாயன் தன்னைக் * கடல் கடைந்து அமுதம் கொண்ட *
அண்ணலை அச்சுதனை * அனந்தனை அனந்தன் தன் மேல் **
நண்ணி நன்குறைகின்றானை * ஞாலம் உண்டுமிழ்ந்த மாலை *
எண்ணுமாறு அறிய மாட்டேன் * யாவையும் யவரும் தானே 9

2939 யாவையும் யவரும் தானாய் * அவரவர் சமயம் தோறும் *
தோய்விலன் புலன் ஐந்துக்கும் * சொலப்படான் உணர்வின் மூர்த்தி **
ஆவிசேர் உயிரின் உள்ளால் * ஆதுமோர் பற்றிலாத *
பாவனை அதனைக் கூடில் * அவனையும் கூடலாமே 10

2940 * கூடி வண்டறையும் தண்தார்க் * கொண்டல் போல் வண்ணன் தன்னை *
மாடலர் பொழில் குருகூர் * வண்சடகோபன் சொன்ன **
பாடலோர் ஆயிரத்துள் * இவையும்[1] ஒரு பத்தும் வல்லார் *
வீடில போகம் எய்தி * விரும்புவர் அமரர் மொய்த்தே 11

**அடிவரவு:** புகழும் கூவு பங்கய சாதி அச்சுதன் பால் வானவர் ஒளி
கண்ணன் யாவையும் கூடி மொய்

[1] இவை